# கம்பனும் பாரதியும்

ப. ஜீவானந்தம்

ஜனசக்தி பிரசுராலயம்

சென்னை-14.

முதல் பதிப்பு: மார்ச் 1956.

விலை 4 அணா

ஜனசக்தி பிரஸ், சென்னை-6.

# பதிப்புரை

சென்ற ஆண்டு (1955) நடந்த கம்பர் விழாவில் தோழர். ப. ஜீவானந்தம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவே இப்பிரசுரம். கவிச் சக்ரவர்த்தி கம்பனைப் பற்றியும் அவனது மகா காவியத்தைப் பற்றியும் ஒரு சரியான நிர்ணயிப்புக்கு வருவதற்கு இந்தப் பிரசுரம், எங்களின் "கம்பன் கண்ட தமிழகம்" (ஜீவா அவர்கள் 1954 கம்பன் விழாவில் பேசியது) என்ற மற்றொரு வெளியீட்டைப் போலவே, உதவும் என நம்புகிறோம்.

பிரசுரிப்போர்.

# கம்பனும் பாரதியும்

அறிவுசான்ற அவைத்தலைவர் அவர்களே !

கம்பனின் அன்பர்களே !

சகோதர, சகோதரிகளே !

இன்று எனக்கு பேச 'கம்பனும்-பாரதியும்' என்ற பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியும். எல்லாப் பேச்சாளர்களையும்விட இந்த விழாவில், உங்கள் தலையசைப்பைப் பெற எனக்குத்தான் அதிகக் கஷ்டம். எனக்கு அளிக்கப்பட்டுள்ள பொருள்தான் இதற்குக் காரணம். ஏன் ?

கம்பனைப் பற்றி நீங்கள் பதினேழு ஆண்டுகளுக்கு மேலாக அறிமுகம் ஆனவர்கள். இந்த பதினேழு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும், கம்பனை நன்ருகச் சுவைத்தறிந்த தமிழகத்தின் தலை சிறந்த அறிஞர்கள் பலர், அவரவர் கோணத்திலிருந்து, தங்களுக்கு ஏற்ற இசைவான முறையில் கம்ப விருந்து நடத்த, அதை மனம் நிறைய அனுபவித்துக் களிக்க பேறும் வாய்ப்பும், தமிழகத்தின் இதர பகுதி மக்கள் பொருமைப்படத்தக்க விதத்தில் நீங்கள் பெற்று வந்திருக்கிறீர்கள். அத்தகைய வாய்ப்புப் பெற்ற உங்களிடையில் கம்பனைப் பற்றிப் பேசி, தலையசைப்பையும் கைதட்டலையும் பெறுவது எளிதான காரியமா? அதுபோலத்தான் பாரதியைப் பற்றியும். பாரதி தமிழகத்திற்கு மற்றெல்லாப் புலவர்களையும்விட நன்கு அறிமுகமான பெரும் புலவன். உங்களுக்கும் மிக நன்ருக அறிமுகமான புலவர் பெருமான். பாரதியைப் பற்றி உங்களிடையில் பேசி, 'ஆஹா' என்ற பாராட்டுதலைப் பெறுவதும் அத்தனை சுலபமான காரியமா ? உங்களுக்கு நிரம்பப் பழக்கமான இரண்டு தமிழ் மகா கவிகளைப் பற்றி, உங்களுக்குப் புத்தம் புதுமையான செய்திகளை என்னுல் சொல்லமுடியாவிட்டால், சொல்லும் வகையில் புதுமைபடச் சொல்லமுடியா விட்டால், உங்களுடைய தலையசைப்பை நான் எவ்வாறு பெறமுடியும் ?

முதலில் பாரதியை எடுத்துக்கொள்ளலாம். அப்பால் பாரதியின் வழி கம்பனுக்குப் போகலாம்.

பாரதி ஜனநாயகக் கவி; நாம் வாழ்கிற, நாம் அனுபவிக்கிற புதிய சூழ்நிலையில் உருவாகிய கவி. நமக்கு இதர எல்லாக் கவிகளையும் விட புரிய, தெரிய கவிமழை பொழிந்த கவி. இருபதாம் நூற்றாண்டையக் கவி. தமிழ்க் கவிகளிலேயே நவீனக் கண்ணோட்டம் படைத்த கவி. நமக்கு தேசபக்தியை, சுதந்திர தாகத்தை, புதிய வாழ்வு நாட்டத்தை, போதித்த கவி. நமக்கு உயிருக்குயிரான இனிமை மிக்க கவி.

பெரியவர்களுக்கு,

"ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக்கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணை செய்யவேணும்"

என்று பாட ஆரம்பித்து, சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் உலக முழுவதிலும் மேலும் மேலும் ஆதிக்கம் செலுத்திவரும் நவீன உண்மைகளான, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலிய உண்மைகளை, நமக்கு, நமது நாட்டு யதார்த்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி, போதித்த கவி பாரதி.

தம்பிக்கு 'புதிய ஆத்திசூடி' வடித்து, அதில்,

அச்சந் தவிர்
தெய்வம் நீ என்றுணர்
வையத்தலைமை கொள்

என்று அறிவுரை தந்த கவி பாரதி.

பாப்பாவுக்கு,

"உயிர்களிடத்தில் அன்பு வேணும்-தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
வாழு முறைமையடி பாப்பா"

என்று பாடி பாப்பாவை ஆடவைத்த கவி பாரதி.

தமிழன் வாழ்வை, மனிதன் வாழ்வை புதிய பார்வையோடு பார்த்த பாரதி, நவீன விமர்சனக் கண் படைத்த பாரதி-கம்பனை எப்படி நிர்ணயிக்கிறான் என்பதை நான் எப்படிப் பார்க்கிறேன் என்பதை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

பாரதி தமிழில் எத்துணை, ஈடுபாடு உடையவனோ அத்துணை ஈடுபாடு உடையவன், கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய முப்பெரும் தமிழ்ப் புலவர்களிடத்திலும். எங்கெங்கே பெருமை படத் தமிழ்ப் புலவர்களைக் குறிப்பிடுகிறானோ, அங்கங்கே இந்த முப்பெரும் புலவர்களை பாரதி இணைத்துக் குறிப்பிடுவதை பாரதி இலக்கியத்தில் பரக்கக் காணலாம்.

## கல்வியில் பெரியவன் கம்பன்

செந்தமிழ் நாட்டை நினைந்து பாரதி செம்மாந்து பாடுகிறான் அல்லவா? அந்த "செந்தமிழ் நாடெனும் போதினிலே" என்ற பாட்டில், பாரதி கம்பனின் தன்மையையும் தரத்தையும் வரை யறுத்துக் காட்டுவதைப் பாருங்கள்!

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு

இந்த இரண்டு வரிகளில் கம்பனைப்பற்றிய பாரதியின் ஒரு வரையறுப்பு காணக்கிடக்கிறது. இங்கு, "கல்வியில் பெரியவன் கம்பன்" என்று பாரதி முழு மூச்சோடு நிர்ணயிக்கிறான். "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு"; ஆகவே 'கல்வி சிறந்த தமிழ் நாடு என்று தீர்த்துச் சொல்கிறான். "பல்விதமாயின சாத்திரத்தின் மணம் பாரெங்கும் வீசும் தமிழ் நாடு' தான். ஆயினும் 'புகழ்க் கம்பன் பிறந்ததால்' 'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்று கணிக் கிறான். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்டது'தான் தமிழ்நாடு; அதுபோல் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்-மணி ஆரம்படைத்தது'தான் தமிழ்நாடு, ஆயினும் "புகழ்க், கம்பன் பிறந்த தமிழ் நாடு", எனவே "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்றே பாரதி நிர்ணயிக்கிறான்.

பவணந்தி முனிவரின் 'நன்னூலி' லிருந்து, கா. நமசிவாய முதலியாரின் 'சிற்றிலக்கண வினு விடை' வரையில், இலக்கண

நூல்களிலெல்லாம், ஐந்தாம் வேற்றுமை உருபான ‘இல்’ என்பதை வாக்கியத்தில் பொருத்திக் காட்ட ‘கல்வியில் பெரியவன் கம்பன்’ என்ற வாக்கியத்தையே மேற்கோள் காட்டுகிருர்கள். ஐந்தாவது, ஆருவது வகுப்புப் படித்த மாணவ, மாணவிகளுக்குக் கூட இந்த உண்மை நன்ருகத் தெரியும். இன்று வரையில் ‘கல்வியில் பெரியவன் கம்பன்’ அல்ல என்று யாரும் மறுக்கத் துணியவும் இல்லை.

கம்பன் தமிழகத்தில் தோன்றிய பிறகு ‘கல்வியில் பெரியவன் கம்பன்’தான். பாரதியின் நிர்ணயிப்பும் இதுதான். எனினும் எனது பேச்சுக்கு இந்த நிர்ணயிப்பு முக்யமல்ல.

## கம்பனுக்கே முதலிடம்

பாரதியின் கம்பனைப்பற்றிய மற்ருெரு நிர்ணயிப்பு என்ன?

“யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை”

என்பது.

பாரதி, தமிழைப் பற்றிப் பாட, ஆவேசம் கடல்மடை திறந்து பாய்ந்தபொழுது, தமிழைப்போல் இனிய மொழி உலகில் வேறு இல்லை என்று பாடுகிருன்; தமிழ்ப் புலவர்களான கம்பனைப் போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் உலகத்தில் எங்கும் பிறந்ததில்லை என்று பாடுகிருன். இது உண்மையென்றும் உறுதி கூறுகிருன். பன்மொழிப் புலமை வாய்ந்த பாரதி, உலக மகாகவிகளைக் கற்றறிந்து, ஒப்பு நோக்கியே மேற்படி முப்பெரும் புலவர்களை முதல்வரிசையில் வைக்கிருன். காலத்தால் வள்ளுவனும், இளங்கோவும் கம்பனுக்கு முந்தியவர்களேனும், பாரதி வரிசைப்படுத்தும்பொழுது, கம்பனை முதல்வரிசையில் முதலில் வைத்தே பாடுகிருன். பாடவேண்டுமென்று விரும்பினுல் வள்ளுவனையோ இளங்கோவையோ முதலில் வைத்து பாரதிக்கு பாடமுடியாதா, என்ன? முடியும். பின் ஏன் கம்பனை முதலில் வைத்துப் பாடுகிருன்? கம்பன்தான் உலகப் பெரும் புலவர்கள்

யாவரினும் பெரும்புலவன் என்பது அவன் மதிப்பீடு. நாம் எவ்வாறு மதிப்பிடுகிறோம் என்பது வேறு விஷயம். பாரதியின் அழுத்தந்திருத்தமான நிர்ணயிப்பு, கம்பனுக்கே முதலிடம் கொடுக்கிறது என்று நான் பார்க்கிறேன்.

“ கன்னனெடு கொடைபோயிற்று; உயர்கம்ப
நாடனுடன் கவிதை போயிற்று ;
உன்னரிய புகழ்ப்பார்த்த னெடுவீரம்
அகன்றதென உரைப்பர் ஆன்றோர் ”

என்று பாரதி பிறிதோரிடத்தில் பாடுவதும், கவிதை உலகில் கம்பனுக்குத்தான் முதலிடம் அளிக்கிறான் என்பதையே தெளிவு படுத்துகிறது.

கம்பன் தன்னேரிலாத புலவன் என்பது பாரதியின் வரையறுப்பு. எனினும் இதுவும் எனது பேச்சுக்கு முக்யம் அல்ல.

## எல்லையற்றதை எட்டிப் பிடிப்பவன்

கம்பனைப்பற்றிய பாரதியின் இன்னொரு வரையறுப்பைக் கேளுங்கள் ! “விதியே தமிழச்சாதியை என்செயப் படைத்தாய் ?” என்றொரு அகவற்பா பாரதி பாடியிருக்கிறான். “ தமிழச்சாதி ” என்ற தலைப்பில் இப்பொழுது அந்த அகவற்பா வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் நமது முப்பெரும் புலவர் மணிகளைப்பற்றியும், அவர்களுடைய படையல்களைப்பற்றியும், பாரதி பின்வருமாறு விதந்தோதியிருக்கிறான் :

“ சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்,
‘எல்லையொன் றின்மை’எனும் பொருள் அதனைக்
கம்பன்குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழச்
சாதியை அமரத்தன்மை வாய்ந்தது

என்று உறுதிகொண்டிருந்தேன்.”

இங்கு பாரதி கம்பனை எடைபோட முயலும் அதிசய முயற்சியைப் பாருங்கள்! 'எல்லையொன் றின்மை" எனும் பொருளை, கம்பன் குறிகளால் காட்டிட முயலும் அசகாய சூர, அசுர, அற்புத முயற்சியைச் சுட்டிக்காட்டுகிறான். இந்த கம்ப முயற்சியின் நிகரற்ற சிறப்பைப்பற்றிய பாரதியின் நிர்ணயிப்பை நீங்களே ஆழ்ந்து ஆழ்ந்து சிந்தித்து முடிவுகட்டுங்கள் என விட்டுவிடுகிறேன். இந்த நிர்ணயிப்பும் எனது பேச்சுக்கு முக்யமல்ல.

கம்பனைப் பற்றிய பாரதியின் வேருெரு நிர்ணயிப்பைக் கவனிப்போம்.

பாரதி, தனது சுயசரிதையைப் பாடும்பொழுது பின்வரும் சில அடிகளைப் பாடுகிறான் :

கம்பனென்ருெரு மானிடன் வாழ்ந்ததும்,
காளிதாசன் கவிதை புனைந்ததும்,

.................................................

சேரன்தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வவள்ளுவன் வான்மறை தந்ததும்"

.................................................

அன்ன யாவும் அறிந்திலர்.

இங்கு சேரன் தம்பியான இளங்கோவின் சிலப்பதிகாரப் பெருமையைச் சுட்டிக் காட்டுகிறான். தெய்வ வள்ளுவனின் திருக்குறள் மகிமையை எடுத்துரைக்கிறான். ஆனால் கம்பனின் இராம காதையைக் குறிப்பிட்டு, கம்பனுடைய கவிதா விலாசத்தை மேம்படுத்தவில்லை. கவிதைப் பெருமையைச் சொல்லும்பொழுது, "காளிதாசன் கவிதை புனைந்ததும்" என்றே சொல்கிறான். காளிதாசன் கவிதைகளில் பாரதி மிகவும் ஈடுபாடுடையவன் என்பது நமக்குத் தெரியும்.

"தெய்வீகச் சாகுந்தலம் எனும் நாடகம்
செய்தது எவர்கவிதை—அயன்
செய்வதனைத்தின் குறிப்புணர் பாரத
தேவி அருட்கவிதை"

என்று வேருேரிடத்தில் பாடி, தனக்கு காளிதாசனின் நாடகங்களிலும் கவிதை வளத்திலும் எவ்வளவு ஈடுபாடு உண்டு என்பதைக்

காட்டுகிறான். ஆகவே, அவன் காளிதாசன் கவிதையைப் புகழ்ந்ததில் ஆச்சரியமில்லை. ஆனால், எங்கும் வள்ளுவனோடும் இளங்கோவோடும் கம்பனை தமிழ்ப் புலமையில் ஒரு வரிசைப்படுத்திக் காட்டியிருக்கிற பாரதி, இங்கு அவ்வாறு வரிசைப்படுத்தாததும், 'கம்பனோடு கவிதை போயிற்று' என்று பாடிய பாரதி இங்கு காளிதாசன் கவிதையோடு கம்பன் கவிதையையும் இணைத்து வரிசைப்படுத்தாததும் உண்மையில் நமக்கு ஆச்சரியத்தை அளிக்கும். ஆனால் ஆச்சரியத்திலும் ஆச்சரியம் அளவளாவ கம்பனை எவ்வாறு புகழ்கிறான் தெரியுமா? "கம்பன் என்றொரு மானிடன்" என்று புகழ்கிறான். ஆம் மானிடனாகப் பிறந்த ஒருவனுக்கு 'ஒரு மானிடன்' என்ற புகழைவிடப் பெரும்புகழ் வேறில்லை அல்லவா?

## கம்பன் ஓர் மானிடன்

பாரதியின் வரையறுப்பில் கம்பன் கவிச்சக்கரவர்த்தி - கம்பன் ஒரு மானிடன் (Kamban the greatest poet and the man). ஆனால், 'கம்பன் ஒரு மானிடன்' என்ற வரையறுப்பைத்தான் நான் எனது பேச்சுக்கு மிக முக்கியமான வரையறுப்பாக எடுத்துக் கொள்கிறேன்.

கிரேக்க நாட்டில் ஒரு ஞானி, பண்டு, பட்டப்பகலில் கையில் ஒரு விளக்கைப் பிடித்துக்கொண்டு, ஏதன்ஸ் நகரின் நடுத்தெருக்களில், "ஒரு மனிதன் தேவை" (Wanted a man) என்று அலைந்து திரிந்தான். நமது பாரதியோ கம்பனில் 'ஒரு மானிடனை'க் கண்டான்.

பாரதி, கம்பனை, கவிச்சக்கரவர்த்திகளில் முதல்வன் என்று அழைத்ததற்கும் மேலாக 'ஒரு மானிடன்' என்று ஏன் பாராட்டுகிறான்? 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பதுபோல், மகாகவியாகிய கம்பனுடைய மகா காவியத்தில் முங்கி மூழ்கிய மகாகவியாகிய பாரதி, கம்ப காவியம், 'பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற' மானிடமயமாகப் பொங்கி வழிவதைக் காண்கிறான். கம்ப சித்திரங்கள் 'மானிடத்தை' ஆழமாகவும், விரிவாகவும், நுட்பமாகவும், 'அழகெனும் அழகும் ஓர் அழகு பெற'ச் சித்தரித்துக் காட்டுவதைப் பார்க்கிறான் - 'கம்பன் ஓர் மானிடன்' என்று நிர்ணயித்து, அந்த நிர்ணயிப்பை உலகறிய முழக்குகிறான்.

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் கம்பனைப்பற்றி யாரும் நிர்ணயிக்காத, 'கம்பன் - ஓர் மானிடன்' என்ற புதிய நிர்ணயிப்புக்கு பாரதி வருகிறானல்லவா?

ஏன் இவ்வாறு நிர்ணயிக்கிறான்? இதை யறிய, பாரதியின் வாழ்க்கைக் கண்ணோட்டம் என்ன என்பதை ஊன்றிக் கவனித்துத் தெரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு தெரிந்துகொள்ள, பாரதி இலக்கிய முழுவதிலும் தேசீயப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், இதர இலக்கியங்கள் முழுவதிலும்—சில சொற்கள் அடிக்கடி பயிலப்படுகின்றன. அவை, எந்த இடத்தில் என்ன பொருளில் வழங்கப்படுகின்றன என்பதைக் கண்டுபிடிக்க முயலவேண்டும்.

'கிருதயுகம்', 'அமரநிலை', 'இங்கு' ஆகிய சொற்கள் பலவிடங்களிலும் பயிலப்படுவதை ஊன்றி நோக்கி, 'அவற்றின் கருத்துக்களைப் பொருத்தி'ப் பார்ப்போமானால், பாரதியின் தத்துவ தரிசனத்தை—வாழ்க்கைக் கண்ணோட்டத்தைக் காணமுடியும் என்று நான் கருதுகிறேன்.

## இவ்வுலகிலேயே நல்வாழ்வு

முதன் முதலில் 'இங்கு' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம்: 'இங்கு' என்ற சொல்லை, 'இந்த உலகத்தில்' 'இந்த ஜன்மத்தில்' 'இம்மையில்' என்ற பொருள்பட பாரதி எவ்வாறு உபயோகப்படுத்துகிறான் என்பதை உன்னித்து நோக்குங்கள்.

'தமிழ்' என்ற பாட்டில்:

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கு அமரர் சிறப்புக் கண்டார்"

என்று பாடுகிறான்.

'வேண்டும்' என்ற கவிதையில்,

"மண் பயனுற வேண்டும்
வானகம் இங்குத் தென்பட வேண்டும்"

என்கிறான்.

'அறிவே தெய்வம்' என்ற பாட்டில்,

> "கவலை துறந்து இங்கு வாழ்வதே வீடு எனக்
> காட்டும் மறைகளெல்லாம்"

என்று பாடுகிறான்.

'ஜீவன் முக்தி' என்ற பாட்டில்,

> "ஐயமுண்டு பயமில்லை மனமே - இந்த
> ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு"

என்று பாடுகிறான்.

'சொர்க்கமோ', 'மோட்சமோ', 'கைலாசமோ', 'வைகுண்டமோ' இந்த வாழ்நாளில், இந்த உலகத்தில், கண்கூடாக, அனுபவ சாத்தியமாகக் கிடைக்கப் பெறவேண்டும் என்பது பாரதியின் அசைக்க முடியாத கோரிக்கை. ஆகவே, கற்பனையில் எங்கோ இயங்குகிற 'வானகம்' இங்கு முளைக்கவேண்டும் என்று வேண்டுகிறான். கவலையற்று இந்நில உலகில் வாழ்வதுதான் 'மோட்சம்' என்று வேத சாட்சியாகக் கூறுகிறான். இந்த ஜன்மத்தில் விடுதலையும், நிலையான வாழ்வும் உண்டு என்ற முற்ற முடிந்த முழு நம்பிக்கையை அள்ளி வீசுகிறான்.

இதுமட்டுமல்ல. இந்த வாழ்வுக்கு அப்பால் 'மறுமை'யில் நம்பிக்கை வைப்பதையும் வேரோடு பிடுங்கி எறிகிறான்.

> செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
> சேர்ந்திடலா மென்று எண்ணி யிருப்பார்
> பித்த மனிதர் அவர் சொலும் சாத்திரம்
> பேயுரையாம் என்று ஊதேடா சங்கம்

செத்த பிறகு நம்பிக்கை வைக்கும் மனிதரை பித்தர் என்றும் அவர் பேசும் சாத்திரம் பேயுரை என்றும், கண்டனக்கணை பாய்ச்சுகிறான். இதைவிட மறு உலக நம்பிக்கையை, மறு பிறப்பு எண்ணத்தைத் தாக்கித் தகர்ப்பது எப்படி? நீங்கள் உடன்படுகிறீர்களோ, முரண்படுகிறீர்களோ, பாரதியின் ஐயந்திரிபுக்கு இடமற்ற கருத்து இது.

செத்த பிறகு எந்த வாழ்வும் இல்லை என்கிறான். இங்கேயே 'வானக' வாழ்வு வேண்டும் என்கிறான். சான்றோர்களின் லட்சிய வாழ்வான முழுநிறை இன்ப நல்வாழ்வு இந்தப் பிறப்பிலேயே மனித வர்க்கம் முழுமைக்கும் கைகூட வேண்டும் என்பதுதான் பாரதியின் தனி விருப்பம்.

## சமதர்ம அமர நிலை

இரண்டாவதாக 'அமரநிலை' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். உயர் மனிதன், அப்பழுக்கற்ற, பண்பட்ட மனிதன், வாழ்வாங்கு வாழும் மனிதன், மானிடம் கைவந்த மனிதன் - இத் தகைய மனிதனின் தரத்தை அமரநிலை என்று அழைக்கிறான் பாரதி.

அங்கங்கே இக்கருத்தை அவன் வெளியிடும் விந்தையைப் பாருங்கள். 'விநாயகர் நான்மணி மாலை' என்ற நூலில்,

"விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணத் துயரிலாதிங்கு
நிச்சலும் வாழ்ந்துநிலை பெற்றோங்கலாம்;
அச்சம்தீரும்; அமுதம் விளையும்;
வித்தை வளரும்; வேள்வி ஓங்கும்;
அமரத்தன்மை எய்தவும்
இங்குநாம் பெறலாம்; இஃதுணர்வீரே!"

என்று பாடுகிறான்;

"கண்ணன் திருவடி" என்ற பாட்டில்,

"இங்கே அமரர்
சங்கம் தோன்றும்
மங்கும் தீமை
பொங்கும் நலமே"

என்று பாடுகிறான்.

"முப்பதுகோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை"

என்று பாடுகிருனே 'பாரத சமுதாயப் பாட்டு', அந்தப் பாட்டில்

"எல்லோரும் அமர நிலை எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற்கு அளிக்கும்—ஆம்
இந்தியா உலகிற்கு அளிக்கும்"

என்று பாடும்பொழுது, 'அமர நிலை'க்கு அர்த்தமென்ன என்று ஆழ்ந்து சிந்தியுங்கள்.

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியமக்கள்
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"

எனப் பெருமிதத்தோடு பாடுகிருனே, அந்த நிலையைத் தானு, அந்த சமதர்ம ஜனநாயக நிலையைத்தானு 'அமர நிலை' என்கிருன்? அந்த 'அமர நிலை'யைத்தானு இந்தியா உலகிற்கு அளிக்கும் என்கிருன் என்பதையும் தீர்க்கமாகச் சிந்தித்துப் பாருங்கள்!

## பாரதி காணும் கிருதயுகம்

மூன்ருவதாக 'கிருத யுகம்' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். மானிட வர்க்கத்தின் லட்சிய வாழ்க்கையை, புதிய சமுதாய வாழ்க்கையை, 'கிருதயுகம்' என்ற சொல்லால் பாரதி அழைக்கிருன் என்று, அவனுடைய இந்த சொற்பிரயோகத்தை பரக்கப் படிக்கும்பொழுது எனக்குப் படுகிறது. பாரதி 'கிருத யுகம்' என்ற சொல்லைப் பல இடங்களில் உபயோகித்திருக்கிருன். 'அமர யுகம்', 'சத்ய யுகம்' என்ற சொற்களையும் அதே பொருளில் இரண்டொரு இடங்களில் உபயோகித்திருக்கிருன். அவன் 'கிருத யுகம்' என்ற சொல்லை எந்தப் பொருளில் உபயோகித்தி

ருக்கிறான் என்பதற்கு ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளைத் தருகிறேன்.

'விநாயகர் நான்மணி மாலை'யில் ஓரிடத்தில்,

"பொய்க்கும் கலியை நான் கொன்று
பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருத யுகத்தினையே
கொணர்வேன் தெய்வவிதி இஃதே"

என்று கூறுகிறான். மற்றோரிடத்தில்,

"நல்லகுணங்களே நம்மிடை அமரர்
பதங்களாம், கண்டீர், பாரிடை மக்களே!
கிருதயுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம்நான் கொண்டனன்"

என்று பாடுகிறான்.

இங்கே பாரதி மனித குலத்தை. கலியுகம் முடியும்வரைக் காத்திருக்கச் சொல்லவில்லை. கிருதயுகம் மலரும்வரைப் பொறுத்திருக்கச் சொல்லவில்லை. பொய்வாழ்வை, போலி வாழ்வை ஆதாரமாகக் கொண்ட கலியுகத்தை ஒழித்துக் கட்டி, மானிடத்தின் வெற்றியான கிருதயுகத்தினை, 'பூலோகத்தார் கண்முன்னே' நிலைநாட்டுவேன் என்று உறுதி கூறுகிறான். இது, தான் கேட்டு வந்த வரம் என்கிறான். தனது குறிக்கோள் என்கிறான்.

'ஜார் வீழ்ச்சி' என்ற பாட்டில்,

"இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுகமாதோ"

என்று பாடுகிறான்.

இங்கே ஜாரின் வீழ்ச்சியை கலியுகத்தின் வீழ்ச்சியாகவும் சோவியத் மலர்ச்சியை கிருதயுகத்தின் எழுச்சியாகவும் பாரதி பார்க்கிறான். பழைய பஞ்சாங்கப்படி, கலியுகம் மறைய, கிருதயுகம் பிறக்க பாரதி காத்திருக்க வில்லை.

இப்பொழுது நீங்கள் உணரமுடியும், நான் பாரதியின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தை எவ்வாறு பார்க்கிறேன் என்பதை. மனி

தர்கள் ‘ இங்கு ’ ‘ அமர நிலை ’ எய்தும் ‘ கிருத யுகம் ’ பாரதியின் வாழ்க்கைக் கண்ணோட்டம், மானிடம் நிறைந்த ஓர் புத்தம்புதிய சமுதாயம் பாரதியின் வாழ்க்கைக் கண்ணோட்டம்.

இந்தக் கண்ணோட்டத்தோடு பாரதி கம்பனைப் பார்க்கிறான். ‘ கம்பன்–ஓர் மானிடன் ’ என்று நிர்ணயிக்கிறான்.

## மகா கவி யார்?

தன் கால வாழ்வின் இனிமையை இன்னும் பெருக்குகிறவனும், தன்கால நாகரீகத்தை இன்னும் உயர்த்துகிறவனுமே மகாகவி என்ற பேருக்குத் தகுதியுடையவன் என்று இந்தியாவின் தலைசிறந்த தத்துவ ஞானியும், இந்தியக் குடிஅரசின் உதவி ஜனாதிபதியுமாகிய டாக்டர் இராதாகிருஷ்ணன் தாம் எழுதிய “ இந்தியப் பெரியார்கள் ” என்ற நூலில், ரவீந்திரநாத தாகூரைப் பற்றி எழுதும்பொழுது குறிப்பிடுகிறார். அதோடு மட்டுமல்ல; அப்பெரியார், தாகூர் இலக்கியத்தில் விரவிக் கிடக்கும் முக்கியமான மூன்று அம்சங்களையும் சுட்டிக்காட்டுகிறார். அவை : (1) உள் வாழ்வின் நேர்மை, உள் வாழ்வின் பயிற்சி ஆகியவற்றின் விளைவாக ஏற்படும் ஆத்மீக மதிப்பீடுகளின் இறுதித் தன்மை; (2) வாழ்வை மறுப்பது அல்லது துறப்பது ஆகியவற்றின் கையாலாகாத் தன்மை—வாழ்வின் தூய அல்லது முழு வளர்ச்சியின் அவசியம். (3) கடைப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்ட எல்லோரிடமும் நேரடியாக அன்பும் அருளும் காட்டும் மனப்பான்மை.

இந்த மனித வாழ்வின் சீரிய அம்சங்களை, பாரதியிடம் பரக்கக் காணலாம்; கம்பனிடம் கைதேர்ந்த விதத்தில் அவன் அருளிய மானிட மகா காவியம் முழுவதிலும் பார்க்கலாம்.

“ உண்மையான கவிதையில் கவிஞனின் இதயம் மலர்கிறது ; கற்பனை மலர்கிறது; மொழிவளம் மலர்கிறது ; மானிட ஆர்வம் மலர்கிறது ; உணர்ச்சி மலர்கிறது ; சிந்தனை மலர்ந்து சிறகடித்துப் பாய்ந்து செல்கிறது ” என்று ஆங்கில இலக்கிய ஆராய்ச்சி மன்னனாகிய கோலரிட்ஜ், ஷேக்ஸ்பியரைப்பற்றிக்

கூறும்பொழுது கூறுகிருன். இவை இத்தனையும் இதற்கப்பாலும் நாம் கம்பன் கலைக் கோவிலில் கவிதை நடனத்தில் கண்டு களிக்கலாம்.

"பேராற்றலும் பெருந்திறனும் மட்டும் ஒருவனைக் கலைஞனுக்கிவிடாது; அவன் படையலின் பின் ஒரு மனிதன் காட்சியளித்தாக வேண்டும்" என்று அமெரிக்க ஞானியான எமர்சன், கத்தே என்ற ஜர்மன் மகாகவியைப்பற்றிக் கூறும்பொழுது குறிப்பிட்டுச் சொல்கிருன்.

கம்ப சித்திரங்கள் முழுவதிலும், எமர்சன் குறிப்பிடும் 'மனிதன்' பின்னணியில் நின்று காட்சியளிப்பதைக் காணலாம்.

"செத்ததன்மை முழுவதையும்
விழி நெருப்பு உமிழ வெறுத்துக் தள்ளு;
வாழ்வின் சகல வகைகளையும்
உச்சிமேல் வைத்து மெச்சு"

என்று சோவியத் மகா கவியாகிய மாயகோவஸ்கி பாடுகிருனே இந்த வாழ்வின் வீறை, விறலை கம்பன் காவிய முழுவதிலும் முழுவடிவத்தில் காணலாம்.

வாழ்வைக் கட்டிக் காக்கும் மானிடப் பெரும்படையின் அணி வகுப்பில் ஒவ்வொரு மனிதனையும் போர்வீரனுக்கி நிறுத்துவதிலும், பிரபஞ்ச முழுவதையும் கம்பீர நடைபோட்டுச் சுற்றி வர நாடும் பேராவலை ஊட்டுவதிலும் உலக மகாகவிகளில் கம்பனுக்குக் கம்பனே நிகர்.

"குருதியிலே கரைந்த நெருப்பைப் போலக்
காதல் தாகம் கவிதையை நிறைக்கவேண்டும்
லட்சியமற்றக் கவிதை உயிரற்றது.
அதன் வேகம் அணையும் நெருப்பை ஒத்தது.
சிறந்த கலைஞன் இயற்கையைப் பயன்படுத்தித்
தன்லட்சியத்தை வெளியிடுகிருன்;
அவன் புது உலகை சிருஷ்டிக்கிருன்
நமக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகிருன்"

என்று மகா கவியான மகமத் இக்பால் கூறுகிருன்.

" ஆழ்ந்த தத்துவ ஞானியாக இல்லாத எவனும் இதுவரை ஒரு மகா கவியாக இருந்ததில்லை " என்று கோலரிட்ஜ் என்ற விமர்சகப் பேராசிரியன் கூறுகிறான்.

" நமக்கு நன்னம்பிக்கை யூட்டி லட்சிய உறுதியோடு வாழ்க்கையின் கடிய, கொடிய சோதனைகளை அசையாத ஆண்மையோடு சகிக்கப் பண்படுத்தும் கலை எதுவோ அதுவே சிறந்த கலை " என தனது கால அரபிக் கவிதைகளைப்பற்றி நபிகள் நாயகம் கூறுகிறார்.

" அறம் வெல்லும் பாவம் தோற்கும் " என்ற மகத்தான மானிட லட்சியத்தை மலைபோல் முன்னிறுத்தி பாவின் சுவைக் கடல் உண்டெழுந்து தீம்பாற்கடலைப் பொழிகிறான் கம்பன்.

கம்ப காவியத்தில் திளைத்த பாரதி " கம்பன் என்று ஒரு மானிடன் வாழ்ந்ததும் " என்று பாடுகிறான்.

இனி மானிட சித்திரங்களாகிய கம்ப சித்திரம் சிலவற்றை உங்கள் முன் வைக்கிறேன்.

உடற் பண்பிலும் உள்ளப் பண்பிலும் நிறைகுடமாக விளங்கும் இராம லட்சுமணரை, ஒரு மலையின் முகட்டில் கம்பன் கொண்டு வந்து நிறுத்துகிறான்.

## மானுடம் வென்றது

இராமனைப் பற்றியும் இலக்குமனைப் பற்றியும் அனுமன் வாயிலாகச் செவியாரக் கேட்ட சுக்ரீவன், அவர்களைக் கண்டு களிக்க வருகிறான். வருகிற வழியில், ஒரு திருப்பம் திரும்பியதும் இராம லட்சுமணர்களின் உருவங்களைத் திடீரென்று காண்கிறான். இயற்கையின் படைப்பில் இப்படியும் அற்புதம் நிகழுமா என்று மூக்கில் விரலை வைத்துக்கொண்டு ஒரே அதிசயத்தில் மூழ்கி விடுகிறான். பின்னர், ' ஆஹா ! சரி, சரி ' என்று ஒரு முடிவுக்கு வருகிறான். 'தேவர்களுக்கெல்லாம் மேலான தேவர்கள் தங்கள் பிறப்பை மாற்றிக்கொண்டு, மனிதப் பிறப்பெடுத்து, இங்கு வந்திருக்கிறார்கள். இதில் துளியும் ஐயம் இல்லை !' என்று வீரனான சுக்ரீவன் ஆனந்த பரவசமடைகிறான். அப்பால், சிவபெருமானையும், பிரமனையும் மற்றுமுள்ள கடவுளர்களையும் மானிடம் - மானிட வாழ்வு

வென்றுவிட்டது, நிச்சயமாகவும் வென்றுவிட்டது என்று வாய் விட்டுக் கூறுகிறான்.

கம்பன் பாட்டைக் கேளுங்கள் :

தேறினன் ; அமரர்க் கெல்லாம்
தேவராம் தேவர் தாமே
மாறிஇப் பிறப்பில் வந்தார்
மானுட ராக மன்னோ !
ஆறுகொள் சடிலத் தானும்
அயனும் என்றிவர்க ளாதி
வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்ற தம்மா !

கம்பன் தனது காவியத்தின் நடுநாயகப் பாத்திரமான இராம னில் மானிடத்தின் கொடுமுடியைக் காட்டுகிறான். காட்டி, மானி டப் பிறப்பு வேறுள பிறப்பை எல்லாம் வென்றுவிட்டது என்று கூறி மனித மாண்பை விண் முட்டத் தூக்கிப் பிடிக்கிறான். இந்தக் கம்ப சித்திரத்தைக் காண்கிற நாம், புது உலகக் கலைஞனை மாக்ஸிம் கார்க்கி சொன்னதுபோல், "மனிதன் ! எத்துணை மகா மந்திரச் சொல்" என்று வியக்க நேருகிறது.

பின்னால் சுக்ரீவன் கண்டு, "வேறுள குழுவை யெல்லாம் மானிடம் வென்ற தம்மா" என்று இறும்பூதெய்தும்படிச் செய்த இராமன், முன்னால் மாமுனிவனான வசிட்டன் பார்வையில் எவ் வாறு படுகிறான் என்பதை கம்பன் சொல்லக் கேளுங்கள்.

தசரதன் ஆட்சி பீடத்தைத் துறக்க நினைக்கிறான். வசிட்டன் முதலான அமைச்சர்களை சபைக்கு வரச்செய்கிறான். அவர்களைப் பார்த்து, "நாட்டையும் மக்களையும் இராமன் செவ்வையாகப் பாதுகாக்கும் திறமுடையவன்தானா ? உங்கள் கருத்து என்ன ?" என்று கேட்கிறான். அதற்கு வசிட்டன் பின்வருமாறு பதிலிறுக் கிறான் :

"தரும தேவதையே இராமனாக அவதரித்திருக்கிறது என்று சொல்வதைவிட வேறு என்ன சொல்லக் கிடக்கிறது? பிரம்மனும், திருமாலும், சிவபெருமானும்—படைப்பு, பாதுகாப்பு, அழிப்பு

என்ற மூன்று தத்துவங்களாக நின்று உலகத்தை அழகாக அமைத்து வைத்திருக்கின்றனர். ஆயினும், இயற்கையின் திருத்தத்தையும் திருத்தவல்ல பேரறிவும் பேராற்றலும் வாய்ந்த மனிதனும் பிறக்கிருன். அத்தகைய மனிதன்தான் இராமன்."

இனி பாட்டைப் படியுங்கள் !

புறத்து நாம்ஒரு பொருள்இனிப்
 புகலுவ தெவனே ?
அறத்தின் மூர்த்திவந் தவரித்
 தான்என்ப தல்லால்,
பிறத்து, யாவையும் காத்தவை
 பின்னுறத் துடைக்கும்
திறத்து மூவரும் திருத்திய
 திருத்தும் அத் திறலோன்.

மும்மூர்த்திகளின் படைப்புகளையும் திருத்தி அமைக்கத் தக்க சக்தி—மகாசக்தி, மனிதனிடம் பொதிந்து கிடக்கிறது என்ற கம்பனின் குறிப்பு உன்னி உன்னி ஓரத்தக்கது.

கம்பன் தனது மானிடத்தின் இரண்டு ஈரற்பைகளாக அறத்தையும் அன்பையும் கொள்கிருன். ஆகவே கம்பனின் இராமன் அறத்தின் மூர்த்தியாய் விளங்குவதுபோல அன்பின் மூர்த்தியாகவும் காட்சி அளிக்கிருன்.

தண்டகாருண்யத்து முனிவர்கள் இராமனை அடைக்கலம் புகுகிருர்கள். அரக்கர்களின் இரக்கமற்ற தொல்லைகளிலிருந்து தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று இராமனிடம் கனிந்து வேண்டுகின்றனர். இராமன் அஞ்சேல் என்று அபயம் அளிக்கின்ருன். அப்பொழுது அவன் அவர்களிடம் ஒரு உண்மையைக் கூறுகின்ருன். என்ன கூறுகின்ருன் ?

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவனே மனிதனில் மாண்புடையவன். ஆவுக்காகவோ, அந்தணர்க்காகவோ, எளியவர்க்காகவோ, யாருக்காகவோ, ஒருவன் பிறர்நல—பொதுநல நாட்டத்தோடு, உயிரைத் தியாகம் செய்வதில் வெற்றி பெறுவா

ஞயின் அவன் தேவாதி தேவர்களாலும் கையெடுத்துக் கும்பிடும் தகுதியுடையவனுகி விடுகிருன்:

ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க் கேனும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவரே தகை வாறுறை
தேவர்க் கும்தொழு தேவர்க ளாகுவர்.

(அகத்தியப் படலம்-21)

மேலும் அதே முனிவர்களிடம் 'அஞ்சவேண்டா' மென்று தேறுதல் கூறும்பொழுது, இராமன் வாயிலாக கம்பன் 'அறம் வெல்லும்' என்ற சர்வநிச்சயத் தன்மையைக் கூறும் பாணியைப் பாருங்கள்! சூரசங்காரனுன சுப்ரமணியக் கடவுளும், சங்கு சக்கர தாரியான மகா விஷ்ணுவும், திரிபுரம் எரித்த சிவபெருமானும் அரக்கர்களுக்குத் துணைபோவாராயின், நான் அவர்களையும் வேர றுப்பேன் என்று உறுதி கூறுகிருன் இராமன். இதன் பொருள், பாவத்திற்குத் துணைபோயின், மும்மூர்த்திகள்கூட அழிவர் என்று கூறி, மனித தருமத்தின் சர்வ வல்லமையை தூக்கி வைத்துப் புகழுகிருன் கம்பன்.

சூரறுத்தவ னும்சுடர் நேமியும்
ஊரருத்த ஒருவனும் ஓம்பினும்
ஆரறத்தி னுடன்றி நின்ருர் அவர்
வேரறுப்பென் வெருவன்மின் என்ருன்.

(—அகத்யர் படலம்-22)

## அழியினும் அடைக்கலம் தேடுவர்

விபீஷணன் இராமனிடம் அடைக்கலம் புக வருகிருன். வந்த விபீஷணனை ஏற்றுக்கொள்ளலாமா கூடாதா? என்று இராமன், மந்திராலோசனை சபை கூட்டி தனது தளபதிகளிடம் கேட்கிருன். வானரர்களெல்லாம் எக்காரணத்தைக் கொண்டும் விபீஷணனை நம்மோடு சேர்த்துக்கொள்ளக் கூடாதென்கிருர்கள். சுக்ரீவனும் விபீஷணனை ஏற்றுக்கொள்ளும் யோசனையை அழுத்தந் திருத்தமாக மறுக்கிருன். தம்பி இலக்குவனும்கூட உக்ரமாக

எதிர்க்கிருன். அந்தச் சபையில் அனுமன் மட்டுமே விபீஷணனை ஏற்றுக்கொள்வது சரி என்று யோசனை சொல்கிருன். ஆனுல் அவனுடைய யோசனை அந்த சபையில் பலவீனமாகவே கேட்கிறது. சில வானர வீரர்கள், விபீஷணன் உளவு தெரிய வந்திருப்பான்; அவனை உடனே கொன்றுவிட வேண்டும் என்றுகூட யோசனை சொல்கிருர்கள்.

இந்தச் சூழ்நிலையில் இராமன் மனிதத் தன்மையின் உன்னதமான உணர்ச்சியை வெளியிடுகிருன். கம்பனுடைய இராமன் கூறுகிருன்: அடைக்கலம் என்று வருகிறவன், நமக்கு முன்பின் தெரியாது இன்று புதிதாக வருகிறவனுக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் எனது பரம விரோதியான இராவணனே அடைக்கலமாக வந்தால் அவனையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வந்து நம்மோடு சேர்ந்த பிறகு, நமக்குத் துரோகம் செய்கிருன், நமது உயிர்க்கு உலைவைக்கிருன் என்றிருக்கட்டும். அப்பொழுதும் நமக்கு நஷ்டமில்லை. புகழே பெருகும்.

இதோ கம்பன் பாட்டு!

இன்று வந்தான் என்றுண்டோ?
எந்தையை யாயை முன்னைக்
கொன்று வந்தான் என்றுண்டோ?
புகலது கூறு கின்ருன்.
தோன்றுவந் தன்பு பேணும்
துணைவனும் அவனே! பின்னைப்
பின்றும் என்ருலும் நம்பால்
புகழன்றிப் பிறிது முண்டோ?

நீதியிலெல்லாம் நீதி இந்த மனித நீதிதான் என்று இராமன் மூலம் நமக்கு விளக்குகிருன் கம்பன்.

மற்ருெரு கம்ப சித்திரத்தில், 'மானிடம்' சிறந்த முறையில் இராமன் வாயிலாக வெளிப்படுவதைப் பாருங்கள்!

## தம்மவர் குற்றத்தைத் துடைத்தான்

தசரதன் கைகேயிக்கு இரண்டு வரம் கொடுத்திருந்தான். அதனுல் கைகேயி தருணம் வாய்த்ததும், ஒரு வரம், பரதன்

நாடாளவும், ஒரு வரம், இராமன் காடாளவும் பெற்ருள். இராமன் காட்டுக்குச் சென்ருன். பரதனுக்கு ஒன்றும் தெரியாது, இது பற்றி. பிரிவாற்ருமையால் கோபங் கொண்ட தசரதன், தான் வரங்கொடுத்ததை நோவாமல், கைகேயியை நொந்தான். கோபத்தால் சபித்தான். 'இனி நீ எனக்கு மனைவி அல்ல, உன் மகன் பரதன் எனக்கு மகன் அல்லன்' என்ருன். பின்னர் இறந்தான்.

காட்டிலிருந்து பதினன்கு ஆண்டுகளுக்குப் பின் இராமன் நாட்டிற்கு மீண்டான். இராமனிடம் தேவதூதர்கள் தசரதனை அழைத்து வந்தார்கள். தசரதன் இராமனைக் கண்டதும் அரவணைத்துக்கொண்டு, 'உனக்கு ஒரு வரம் கேள்' என்ருன். தசரதன் தனது தவற்றை மறந்து, கைகேயியை மனைவியல்லளென்றும், பரதனை மைந்தனல்லனென்றும் சபித்த குற்றத்தைத் துடைக்கக் கருதி இராமன், "கைகேயியும் பரதனும் எனக்கு அன்னையும் தம்பியும் ஆகும் வரம் தா" என்று கேட்டான். உலகத்து உயிர்களெல்லாம் இராமனை வாழ்த்தின.

இனிக் கம்பன் கவியைப் பாருங்கள் !

ஆயினும் உனக்கமைந்த தொன்று
உறையென அழகன்,
தீயள் என்றுநீ துறந்தளன்
தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம்
தருகெனத் தாழ்ந்தான்.
வாய்திறந்து எழுந்து ஆர்த்தன
உயிரெலாம் வழுத்தி.

தன்னைச் சேர்ந்தாரின் குற்றத்தைத் துடைப்பது, மனிதத் தன்மையின் எத்தனை சிறந்த கடமை உணர்ச்சி என்பதை உலகம் அறியும்படி இராமன் மூலமாகக் காட்டுகிருன் கம்பன். கைகேயியும் பரதனும், தனது தாயும் தம்பியும் ஆகும்படி வரங் கேட்டு, இராமன் தசரதன் முன் தலை வணங்கியதும் என்ன நடந்ததென்று கம்பன் படம் பிடித்துக் காட்டுகிருன் பாருங்கள்! சகல ஜீவராசிகளும் எழுந்து நின்று, வாய் திறந்து, மிக ஆர்ப்

பாட்டத்துடன் 'இராமன் வாழ்க, வாழ்க' என்று கோஷித்தன என்கிருன் கம்பன். கம்பன் இராமனில் ஏற்றிக்காட்டும் மானிடம் தான் என்னே!

## இன்று போய்ப் போர்க்கு நாளை வா!

இறுதியாக ஒரு சித்திரம்:

முதல்நாள், இராமனுக்கும் இராவணனுக்கும் கடும் போர். ரத, கஜ, துரக, பதாதிகளோடு இராவணன் போராடினுன். அத்தனையும் துவம்சம் செய்தான் இராமன். இராவணன் தன் தேரில் நின்று மட்டும் போராடினுன். அவன் தேரை ஒழித்துக்கட்டினுன் இராமன். இராவணன் தரையில் நின்று போராடினுன். அவன் கை வில்லையும் முறித்தெறிந்தான் இராமன். இராவணன் வெறுங் கையோடு நின்ருன்.

பேராண்மையின் திருவுருவாகிய இராமன், தனது பரமவைரியான இராவணனைப் பார்த்து, "இன்று போய்ப் போர்க்கு நாளை தயாரிப்போடு வா" என்று பெருந் தகைமை கனிய வழி அனுப்புகிருன்.

கம்பன் தரும் இந்த நிகரற்ற நாடகக் காட்சியை அனுபவியுங்கள்!

> ஆளையா! உனக்கமைந்தன மாருதம் அறைந்த
> பூளையாயின கண்டனை; இன்றுபோய்ப் போர்க்கு
> நாளைவாவென நல்கினன்; நாகிளங் கமுகின்
> வாளைதாவுறு கோசலைநா டுடைவள்ளல்.
>
> (முதற் போர் படலம் 256)

'நாளைவா' என்று சொல்லுமுன் இராமன், இராவணனிடம், "வலியெலாம் கொண்டுநில்" என்பதும், "நேர்நின்று பொன்றுதி யெனினும் நல்லை" என்பதும், "பிழைப்பினி உண்டெனை நய வேல்" என்பதும் தருமத்தின் சர்வநிச்சய வெற்றி எவ்வாறு பேசும் என்பதைக் காட்டுகிறது.

'நாளை வா' என்று சொல்லாமல் விடப்படுகிருனே இராவணன், அவன் யார்? எத்தகையன்?

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும்
முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த
வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும்......"

உடையவன் இராவணன்.

"தேவருக்கும் திசைக்கரிக்கும் சிவனுர்க்கும்
மயனுர்க்கும் செங்கண்மாற்கும்
ஏவருக்கும் வலியான்"

இராவணன்.

"என்னையே நோக்கி யான்இந் நெடும்பகை
தேடிக் கொண்டேன்"

என்று கொக்கரித்த தன்னகங்காரத்தின் தனிப்பெரும் சிகரம் இராவணன்.

இத்தகைய இராவணனை 'இன்று போய் நாளை வா' என்று சொல்கிருன் மகா மானிடனுகிய இராமன்.

ஹிட்லர் ஆயுதங்களிழந்து தனியாக வந்து, அகப்பட்டுக் கொண்டான் என்று வைத்துக் கொள்வோம். அவனைப் பார்த்து, 'ஹிட்லர் ஐய, இன்றுபோய் நாளை வாருங்கள்" என்று சொல்வார்களா? அப்படிச் சொன்னுல், அதைக்கேட்டுச் சிரிக்கமாட்டார்களா? ஹிட்லர் இப்படி முற்றமுற்ற வலுக்குன்றி நின்ருல் அப்பொழுதே, அங்கேயே அன்னே அவனை எமலோகம் அனுப்பி விட்டுத்தானே மறுகாரியம் பார்ப்பார்கள்? அதைத்தானே மிகச் சிறந்த போர்த் தந்திரம் என்று கூறுவார்கள்?

கம்பன் காவியத்தில் இராமன், யாராலும் வெல்ல முடியாத, வரம்பெற்ற 'இராவணேஸ்வரனை', மறத்தின் மகாமேருவை

'இன்றுபோய் நாளைவா' என்கிருனே, இத்தகைய பேராண்மைப் பாத்திரத்தை எந்தக் காவியத்திலேனும் சரித்திரத்திலேனும், பிரத்யட்ச வாழ்விலேனும், உலகில் எங்கேனும், என்றேனும் கண்டதுண்டா?

"கம்பன் என்றொரு மானிடன்" என்று பாரதி கூறியது எத்துணை மெய்! கம்பன்–ஒரு மானிடன்–அவன் காவியம்–மானிட மகா காவியம். ஐயமில்லை.

அன்பர்களே! கம்பன் காவியத்தில் மென்மேலும் மூங்கி எழுவோம். 'மானிடனை' அறிவோம், புரிவோம், தெளிவோம், அனுபவிப்போம்!

வணக்கம்.

